1995 ஏப்ரல் 20]

368—

புலியனூரில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

38105*—திரு. சா. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா --

திண்டிவனம் வட்டம், புலியனூர் கிராமத்திற்கு ஓர் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

369—

வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

22702*—திரு. கே. தவசி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடமலைக்குண்டு—மயிலாடும்பாறை ஒன்றியத்தில் சிங்கராஜபுரம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

378—

கங்கைகொண்டான் அரசு மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம்

35890*—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 20

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கங்கை கொண்டான் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசாணை நிலை எண் 917, கல்வி, நாள் 29-9-1993-ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி கட்டிட மதிப்பீட்டில் கங்கைகொண்டான் அரசு மேல்நிலைப் பள்ளியின் 50% பங்குத் தொகையான ரூ. 1,12,500 தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்குச் செலுத்தப்பட்டு விட்டதாக மேற்படி பள்ளித் தலைமையாசிரியர் (6-4-94-ம் தேதியிட்ட கடிதம் எண் 584/93-94-ல்) தெரிவித்துள்ளார். மேற்கண்ட தொகையான ரூ. 1,12,50 உடன் அரசின் பங்குத் தொகையான ரூ. 1,12,500-ஐயும் சேர்த்து கங்கைகொண்டான் அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. பேரவைப் பணிகளினின்றும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் நீக்கி வைக்கப்பட்டிருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை மீது பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஆரம்ப காலத்திலே உங்களுக்கு எல்லாம், மூத்த உறுப்பினர் என்ற முறையிலும்—மூத்த உறுப்பினருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற முறையிலும் நம்முடைய முதல்வர் அவர்கள்